

செங்கிப்பட்டி அரசினர் பொறியியல் கல்லூரியில்

# ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி

தஞ்சாவூர், டிச.11–

செங்கிப்பட்டியில் உள்ள அரசினர் பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் துறை சார்பில் அகில இந்திய தொழில்நுட்பக்கழகத்தின் மூலம் ஒரு வார கால ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி நடந்தது. இதில் அகில இந்திய அளவில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் 50 பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி பார்த்தசாரதி கலந்துகொண்டு பேசினார். பயிற்சி ஒருங்கிணைப்பாளரும், கல்லூரி முதல்வருமான ஜெயபால் தலைமை தாங்கினார். இதற்கான ஏற்பாடுகளை பயிற்சி இணை ஒருங்கிணைப்பாளரும், இயந்திரவியல் துறை இணைப்பேராசிரியருமான சிவசங்கர் செய்திருந்தார்.